1990

1A

206

844 சிராந்தி நிலைய கோவை

10.7.90

844 ஏடுபெயர் - சாவித் திறவு கோல்.

முடித்தநாள் - 10.7.90

அளவு - 25.3 × 2.7

ஏடு - 6 - 7

வரி - 5

உரைநடை

கடவுள் முன்னிற்க.

வர்மத் திறவுகோள்.

1. நெற்றி நடு மையத்திலிருந்து ஒரு
இறைக்குத் தாழே புருவத்தின் நடுவில்
திலர்த காலம் -1. திலர்த காலத்துக்கும்
ஒரு நெல்லிடைக்குத் தாழே கும்பிடு
காலம். 2. திலர்த காலத்துக்கும் இரண்டு
விரல் ஒரு நெல்லிடைக்கும் அடுத்து
கண் புருவத்தோட நடுவில் அன்னக் காலம்.
3. கும்பிடு காலத்துக்கும் ஒரு விரலுக்கும்
ஒருநெல்லிடைக்கும் தாழே கண்ணாடி
காலம். 4. கும்பிடு காலத்துக்கும் ஒருவிரல்
ஒரு நெல்லிடைக்கு தாழே கீழ்க்கண் குழியில்
நட்சத்திரக் காலம். 5. அன்ன காலத்துக்கும்
ஒரு நெல்லிடைக்கும் மருத்துக் கண்விழியில்
கண்விழி காலம்-6. காது இறுதண்டு பற்றி
சேவிகுத்திக் காலம்-7. சேவிகுத்திக் காலத்-
துக்கும் மேல் காது இருக்கிற தலம் அடச்சி
காடைக்கிக் காலம். 8. பிரமமுடிந்த
தலத்தில் பிடரிக்காலம்-9. பிடரிக் காலத்துக்கும்
அஞ்சு விரலுக்கும் உசரெ சீறுங்கொல்லி-10.
சீறுங் கொல்லிக்கும் ஆறு விரலுக்கும்
உசரெ சிரசு நடுவில் கொண்டைக்கொல்லி-11.

குதடக்கிக் காலத்துக்கும் நாலு
விரலுக்கும் நேர் உச்சி தனை பொருத்து
வர்மம்-12. குதடக்கிக் காலத்துக்கும்
நாலு விரலுக்கும் முன்னே சென்னிக் குழி
நரம்பு வெட்டும் தலத்தில் சென்னிக்காலம்-13.
சென்னிக்குத்தி காலத்துக்கும் ரெண்டு நெல்லி-
டைக்கு தானே கீழ்நாடி யருகு பற்றி
கோணச் சன்னி வர்மம்-14. தொண்டைக் குழியின்
பதப்பு வர்மம்-15. பதப்பு வர்மத்துக்கும் மூது
விரலுக்கும் நேரு உச்சி கொக்கியன் கொக்கி
வர்மம்-16. கொக்கிக்கும் ஒருவிரலுக்கும்
அடுத்து காடயருகு பற்றி உறக்க காலம்-17.
கைவெள்ளை நடுமெய்யம் சொர்ண தெச்சணை
காலம்-18.

பெரு
கைவிரல், அண்டுவிரல் இவை நடுவில்
கவளி வர்மம்-19. பெருவிரல் நடுவிரல் வர்மம்
ரெண்டு. ரெண்டு வர்மத்துக்கும் இணம்
ஒன்று- 20. எலும்புப் பொருத்துகளின்
விவரம்:- கையெலும்புத் துண்டு நாலு-
காலெலும்புத் துண்டு நாலு- அசைகின்ற
உறுப்புச் சந்தி முப்பத்திரண்டு. இருக்கையெலும்பு
அறுபத்திரண்டு- வரியெலும்பு பதினாறு-
சிரசதில் துண்டு மூன்று- நாக்கின்
மேல் துண்டு நாலு- கழுத்தில் கண்டம் ஆறு

கொக்கிதனின் உறுப்பு நூறு. தேகமெல்லாம் எழுபத்திராயிரம். கையிலே பொருத்து - இரு திண்டு-யெட்டு. கை மணிக் கட்டின் சின்ன அருகு பற்றி யெலும்பு பொருத்து ரெண்டு. விரல்களை அடக்கி இருக்கிற நரம்பு பொருத்துகளின் கணையொன்று கை முட்டின் பொருத்து மூன்று. கைப்புசத்தில் பொருத்து மூன்று. காரையெலும்பு பொருத்து ரெண்டு. கழுத்தில் பொருத்து இருபத்தினாலு தலையெலும்புகள் அறுபத்தினாலு- பல்லு முப்பத்திரெண்டு. நாடியெலும்பு பொருத்து ரெண்டு. தண்டு நாலு. மூக்கில் பொருத்து ரெண்டு.

3. கபாலத்தின் எலும்புகள் எட்டு. வாளின் முனையைப் போல் மூளையைச் சுற்றியிருக்கிறது. விலாவின் எலும்புகள் பதினாறு. தண்டெலும்பு எட்டு. ||

ஆமாசயமும் மற்றும் ஜொன்லுந்நு!

ஆமாசகாயம் மார்புக் கூட்டின் இருக்கிறது. ஆமாசகாயம் ரெண்டுக்கும் மத்தியில் இருதயம் இருக்கிறது. ஈ. ரெலிலிருந்து தான் தேகமெங்கும் நரம்புக் குழல் வழியாய் ரத்தம் பரவுகிறது. மார்புக் கூட்டின் கீழ் இரப்பை இருக்கிறது.

விலாவின் கூட்டில் ரெத்தாசயம் இருக்கிறது. கையெலும்புத் திரண்டு முப்பது. காலெலும்புத் திரண்டு முப்பது. மூத்திரத்தில் வில்பொருத்து ரெண்டு. இடையின் அசைவு பொருத்து நாலு. கால்முட்டின் பொருத்து நாலு. பாதம் பொருத்து மூன்று.

நிறை:- தேகம் தூக்கு நிறை துலாம் எட்டு. மூன்றரைக் கோடி மயிர்த் துவாரம். இருபத்தெண் கோடி மனத்துவாரம். முப்பத்தெண் கோடி நாடித்துவாரம். தோல் முந்நூறு பலம். குடல் முந்நூற்று யெழு பலம். கண்கள் ரெண்டும் ~~களஞ்சி~~ ரெண்டு களஞ்சி. மூக்கு மூன்று களஞ்சி. நாக்கு எட்டுக் களஞ்சி. எலும்பு நூற்றி இருபத்தெட்டு பலம். இறைச்சி பலம் நூற்றி அறுபத்தி ஐந்து. மூளை பலம் - மூன்று. குடலின் நீளம் முழம் - முப்பத்தி ரெண்டு. வெள்ளிநீர், காரிநீர், பித்து, சுவாசகாயம், ரெத்தசயம் பலம் நாலு - தத்துவம் தொண்ணூற்றாறு, தேகத்தில் பதினாறு துவாரம் உண்டு. வெளியே காணப்பட்டது பதினொன்று. அதில் ரெண்டு துவாரம் அடைப்பு.

மார்புக் கூட்டின் கீழ் இரப்பை இருக்கிறது.
விலாவின் கூட்டில் ரத்தாசயம் இருக்கிறது
கையெலும்பு தொண்டு -முப்பது. காலெலும்-
புத் தொண்டு -முப்பது. மூளைரத்தின் பொருத்து-
ரண்டு தலையின் அசைவு பொருத்து
நாலு- கால் மூட்டுப் பொருத்து நாலு.
அடைப்பு] உடற்துவாரம் ஐந்து. வாய்
தொண்டையின் பக்கத்தின் கீழ் ரண்டு
காது ரண்டு துவாரம். மூக்கு துவாரம்-
ரண்டு, தொப்புள் துவாரம் ஒன்று- சிலப்
பாதைத் துவாரமொன்று - மலத்துவார-
மொன்று. கண்ணு துவாரம் ரண்டு.
தேகத்தின் ஆறு திணறு உண்டு. காது,
கண், மூக்கு, வாய், லிங்கம், விந்துகுழி.
இதிலுள்ள மதுரங்களெல்லாம் உப்பின்
இனிப்பதாய் இருக்கும். தலையின்
முச்சாணு யெலும்பு உண்டு. குறுக்கில்
முச்சாணு நீளத்தின் கதை உண்டு.
ஒரு சாணும், நாலுவிரலும் குறுக்கே
யெலும்புகள் இல்லாத இடம் வயிறு.
நெஞ்சக் குழியிலிருந்து படிக்கின்றவரே
யெலும்பில்லாமல் ஒரு பிடி சதையாய்
இருக்கப்பட்ட தலம் நாக்கு- செனிக்குது

முதல் மரிக்கும்வரை வளர்ந்தே இருக்கப்-
பட்ட தலம் கண்ணின் கிருஷ்ணமணி.
தேகத்தின் அசையாத்தலம் கண்ணின் கரு.
தேகத்திலுள்ள கீழ்பாக உறுப்பு கால்-
மேல்பாக உறுப்பு - கைகள் - வயிற்றுக்கு
மேலே கண்டத்தின் தானே சரீரம்.
தேகத்தின் அண்டப்புளி யென்றது. உ-
காலென்றான் சிவனாகும். அடியென்றது-
தொப்புள். முடியென்றது கண். இதுவென்றது
கறுத்த ஈரல். பகல் என்றது வெளுத்த ஈரல்.
குத்திகால் ரத்தம் வராத தலம் கால்-
பெருவிரல். இவ்வித தேகத்தில் பத்து
வாயுக்கள் உண்டு. பிராணன், அபானன்,
வியானன், சமானன், கூர்மன், நாகன்,
கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

உதானன், பிராணன் - மூலத்திலிருந்து
சிரசளவு நிற்கும். உந்தியெனும் தலையின்
நின்று உண்ட அன்ன சாரத்தை நரம்பு-
வழி ஊட்டம் செய்யும்.

சமானன் - எருவையும் மிஞ்சவொட்டான்
தேகத்தி லிருப்பான். கூர்மன் - இருவிழிய-
லிருப்பான். நாகன் - தொட்டாவி இரும்
தலத்திலிருப்பான். தேவதத்தன் - நாவிலிருப்பான்
தனஞ்சயன் சிரசிலிருப்பான்.

பஞ்சபூதம்:— அப்பு, பிரிதிவி, வாயு, தேயு, ஆகாசம். யென்ற பஞ்சபூதம் தேகத்தில் அடங்கி இருக்கிறது.

உற்றதொரு சீவன் நுரை யீரலில் இருப்பதும். உண்ணும் மனம் புத்தியது பித்தத்திலிருப்பாம். மற்றுமுள்ள நீபங்கள் மண்ணீரலில் இருப்பாம். மானமது கொள்வி ஜீவி மாங்காயன் இருப்பாம் சித்தமுறும் சிந்தனை - சிகைப்பீரலிலிருப்பாம் சிந்தைதனில் அந்தவிதம் செருகிடும் அறிந்தவர்கள் அதனருள் பெற்றார்கள் இந்த முறை காண்பார்கள்.
